# கிருபையுள்ள வார்த்தை®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

Vol - 23 | நவம்பர் NOVEMBER | 2022

ஆண்டு சந்தா ரூ. 100/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-




கௌரவ ஆசிரியர் BETTY CHOATE    ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 8 |
| வாலிபர் பகுதி | 9 |
| வரலாற்றில்.. | 10 |
| சிறுவர் பகுதி | 11 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3:30 மணி**

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7:00 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)

**OUR ENGLISH TV PROGRAM**

**SALVATION TV**

**Every Sundays 2pm**

**Speakers:**

**Jerry Bates & Kingsly Rajah**





**கிருபையுள்ள வார்த்தை புதிய வெளியீடு**

**கிருபையின் கீதங்கள்**

**விபரங்களுக்கு :**

**92 4421 4421, 92 4431 4431**


**பாடல் புத்தகம்**

421 பக்கங்கள்
514 தமிழ் பாடல்கள்
29 ஆங்கில பாடல்கள்
100 சிறுவர் பாடல்களுடன்

**கிருபையுள்ள வார்த்தை**

உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும்
நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய
இயேசுகிறிஸ்துவின் வார்த்தை

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth International**

# கல்லறைகள் பேசினால்...

ஆசிரியர் உரை

**P.C. பிலேமோன் ராஜா**



**அன்பான வாசகர்கள் அனைவருக்கும், உயிர்த்தெழுந்து என்றும் ஜீவனோடிருக்கின்ற ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினாலே எனது அன்பின் ஜெபங்கள் மற்றும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.**

கல்லறை பேசினால் என்பது கற்பனையான தலைப்பாக இருக்கின்றது அல்லவா? ஒருவேளை நீங்கள், கல்லறை பேசுமா? என நகைச்சுவையாக சிரிக்கலாம். அப்படி பேசினால் எப்படி இருக்கும் என ஆழ்மனதில் சிந்திக்கலாம். வானங்களும், ஆகாயவிரிவும் கர்த்தருடைய கிரியையை அறிவிக்கின்றது அல்லவா? அதுபோல, கல்லறை பேசினால் என்பது, கல்லறைகள் மூலம் கர்த்தர் நமக்கு சொல்லும் செய்தி என்ன? என்பதனை வேதாகமத்தி துணைக்கொண்டு கற்றுக்கொள்ள உதவும்.

## மனிதனுடைய வாழ்வில் மரணமும் கல்லறையும்...

**ஆதியாகமம் 15:15** "நீச மாதானத்தோடேஉ ன் பிதாக்களிடத்தில்சே சருவாய்;ந ல்லமு திர்வயதிலே அடக்கம் பண்ணப்படுவாய்."

கல்லறைகள் என்பது மனித வாழ்வோடு மிகவும் தொடர்புடைய ஒன்றுதான். மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட மனிதன் மண்ணுக்கே திரும்புவான் என்ற வாக்கிற்கினங்க, மனிதர்களை புதைக்கும் பழக்கம் தான் தொன்று தொட்டு இருந்து வந்துள்ளது. எகிப்தில் உள்ள உலக அதிசயமான பிரமிடுகள் மனிதர்களின் சடலங்களை வைக்கும் கல்லறைகளே. மற்றொரு உலக அதிசயமான தாஜ்மகால், ஷாஜகானின் மனைவியாகிய ராணி நூர்ஜகானின் கல்லறை. கல்லறைகள் என்பது யூதர்கள் மற்றும் பாலஸ்தீனர்களின் பழக்கமாக மட்டுமின்றி, இந்த உலகத்தில் மனிதன் ஒரே குடும்பமாக வாழும்போதிலிருந்தே ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் கல்லறைகள் மதங்களை சார்ந்து அல்லாமல், மனிதத்தினை சார்ந்து இருக்கின்றது.

**வெளி 20:14** "அப்பொழுதும ரணமும்ப ாதாளமும் அக்கினிக்கடலிலேத ள்ளப்பட்டன.இ துஇ ரண்டாம் மரணம்."

மனிதர்களுக்கு மரணம் இரண்டு என்று பைபிளில் சொல்லப்பட்டுள்ளதை நாம் அறிவோம். அவை ஒன்று 'சரீர மரணம்' மற்றொன்று 'ஆத்தும மரணம்' சரீர மரணம் இந்த பூமியில் 'உடலை விட்டு உயிர் பிரிவது' ஆத்தும மரணம் 'மனிதன் கடவுளை விட்டு பிரிவது.' இந்த ஆத்தும மரணம் என்பது ஒருவர் பாவத்திலிருந்த மனந்திரும்பும்வரை தற்காலிகமாகவும், ஒருவர் பாவத்திலிருந்து மனந்திரும்பாமலே இருப்பாரென்றால், நியாயத் தீர்ப்பிற்கு பின்பு நித்தியமாகவும் ஏற்படும்.

**தானியேல் 12:2** "பூமியின்தூ ளிலேநி த்திரை பண்ணுகிவர்களாகியஅ நேகரில்சி லர்நி த்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்."

ஆகையால் மனிதர்களாகிய நம்முடைய வாழ்வை கல்லறைக்கு முன்பு, கல்லறைக்கு பின்பு என இரண்டாக பிரிக்க முடியும். கல்லறைக்கு முன்பான வாழ்வு அற்பமானது, அதாவது முடிவுள்ளது. கல்லறைக்கு பின்பு பெறப்போகின்ற வாழ்வு நித்தியமானது, அதாவது முடிவற்றதாக இருக்கின்றது. சரி, பாடத்தின் தலைப்பிற்கு செல்லுவோம்; கல்லறை நம்மை பார்த்து பேசினால், அது என்ன பேசும்...

## 1. துவக்கம் உண்டு (எனக்கும், உனக்கும்)

**யோபு 5:26** "தானியம் ஏற்றகாலத்திலே அம்பாரத்தில் சேருகிறதுபோல, முதிர்வயதிலே கல்லறையில் சேருவீர்."

கல்லறைகள், தனக்கும் மனுகுலத்திற்கும் ஒரு துவக்கம் உண்டு என்று அறிவிக்கின்றன. கல்லறையான தனக்கு மனிதனின் சரீர மரணத்திலே துவக்கம் ஏற்படுவது போல, மானிடருக்கு ஒரு துவக்கம் உண்டு. அந்த துவக்கம் கர்த்தரிடத்தில் இருந்து வந்ததை அறிவிக்கின்றன. அதாவது மனிதன் எங்கே இருந்து வந்தான் என்பதை கல்லறைகள் அறிவிக்கின்றன.

**ஆதியாகமம் 1:26,27** "பின்புே தவன்;ந மது சாயலாகவும்ந மதுரு பத்தின்படியேயும்ம னுஷனை உண்டாக்குவோமாக;அ வர்கள்ச முத்திரத்தின்

மரங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும்ச கலப்பி ராணிகளையும்ஆ ளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்,அ வனைத்தே வசாயலாகவே சிருஷ்டித்தார்;ஆ ணும்பெ ண்ணுமாகஅ வர்களைச் சிருஷ்டித்தார்."

மண்ணான மனிதன், இறுதியில் மண்ணினிடத்தில் திரும்பும்போது, அது கல்லறைகளுக்கான துவக்கமாக இருக்கின்றது. மண்ணான மனிதன் கர்த்தரால், கர்த்தருடைய சாயலில், கர்த்தருக்கென்று படைக்கப்பட்ட போது அவனது துவக்கம் அங்கே ஆரம்பித்ததாக இருக்கின்றது. கல்லறைகள் மனிதனிடத்திலிருந்து வருவது போல அதாவது மனிதன் இறப்பதிலிருந்து உண்டாவது போல மனிதன் என்றும் இருக்கின்ற நித்தியவாசியாகிய கர்த்தரிடத்திலிருந்து வந்தவனாக இருக்கின்றான்.

**ஆதியாகமம் 2:7** "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நா சியிலே ஊ தினார்,ம னுஷன் ஜீவாத்துமாவானான்."

கர்த்தர், அவனுக்கு உடலை இந்த மண்ணிலிருந்த உருவாக்கி, அந்த உடலுக்கு உயிராக தனது சுவாசத்தினையும், அந்த மண்ணான மனிதனை தனது படைப்புகளில் சிறப்பானவாக்க தனது சாயலையும் கொடுத்தார். அவரது சாயல்தான், உள்ளான மனிதனாகிய 'ஆத்துமா'. பறவைகள் விலங்குகள் மரங்கள் எல்லாம் உயிருள்ளவையாக இருந்தாலும், அவைகள் ஆன்மா அற்றவைகளாக இருக்கின்றன.

மனிதனின் துவக்கம் இறைவனிடத்திலிருந்து தான்! அநேகர் தர்க்கத்திற்காக சொல்வது போல ஒரு செல் அமீபாவிடமிருந்தோ, குரங்கிலிருந்தோ வந்தவர்கள் அல்ல. ஏனெனில், அவைகள் அனைத்தும் ஆன்மா அற்றவை. அந்த உள்ளான மனிதனை சிலர் ஆறாம் அறிவாகவும், வேறு சிலர் மனசாட்சியாகவும் சித்தரித்துக்கொள்கின்றனர். பைபிள் அதனை ஆத்துமா என்கின்றது. மேலும், மனிதன் ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம் என்ற மூன்று பகுதியாகவே இருக்கின்றான் என்கின்றது.

**1 தெச 5:23** "சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம்மு ழுவதும்,ந ம்முடையக ர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக." கல்லறைகள், தனக்கும் மனிதனுக்கும் ஒரு துவக்கம் உண்டு என்பதனை அறிவிக்கின்றன.

## 2. பொறுப்பு உண்டு [உனக்கும், எனக்கும்]

**வெளி 20:12-15** "மரித்தோராகியசி றியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும்வே றொருபு ஸ்தகமும்தி றக்கப்பட்டது; அப்பொழுதுஅ ந்தப்பு ஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியேம ரித்தோர்த ங்கள் கிரியைகளுக்குத்தக்கதாகநி யாயத் தீர்ப்படைந்தார்கள்."ச முத்திரம்த ன்னிலுள்ள மரித்தோரைஒ ப்புவித்தது;ம ரணமும்பா தாளமும் தங்களிலுள்ளம ரித்தோரைஒ ப்புவித்தன.யாவரும் தங்கள்த ங்கள்கி ரியைகளின்படியேநி யாயத் தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலேத ள்ளப்பட்டன.இ துஇ ரண்டாம் மரணம்;ஜீ வபுஸ்தகத்திலேஎ ழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோஅ வன்அ க்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்.

அடுத்ததாக, கல்லறைகள் தனக்கும் மனிதனுக்கும் பொறுப்பு உண்டு என்பதனை அறிவிக்கின்றன. கல்லறைகளுக்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலே, இந்த பூமியில் மரித்தவர்களை ஒப்படைக்கும் பொறுப்பு உள்ளது. அதுபோல மனிதர்களாகிய நாமும், இந்த பூமியில் என்ன மாதிரி வாழ்க்கை வாழ வேண்டும் என்ற பொறுப்பு நமக்கு உண்டு என்பதனை கல்லறைகள் நினைவுப்படுத்துகின்றது.

கல்லறைகள் மனிதன் எங்கிருந்து வந்தான் என்பதனை அறிவிப்பது போல, 'மனிதன் ஏன் இங் இருக்கின்றான்?' என்பதனையும் அறிவிக்கின்றன. ஆகையால் நாம், ஏன் இங்கே இருக்கின்றோம் என்பதனை அறிந்து, அதற்கேற்றார் போல ஒரு வாழ்க்கை வாழ வேண்டியது அவசியமாகும். ஏதோ ஏனோதானோவென்று நம் விருப்பத்திற்கிணங்க மனம்போன போக்கில் வாழக் கூடாது. நமக்கான பொறுப்புகளை அறிந்து அதனை செய்திட

வேண்டும். இப்புவியில் நமது பொறுப்புகள் என்ன என்பதனையும் பைபிள் அறிவிக்கின்றது. **நன்மை செய்ய வேண்டும்!** நன்மை மாத்திரமே செய்ய வேண்டும். வேண்டியவர் வேண்டாதவர் என்ற பாகுபாடின்றி நன்மை செய்ய வேண்டும். நமக்கு நன்மை செய்தவர்களுக்கு மாத்திரமல்ல, "தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டும்."

நன்மை செய்வதினாலே மகிழ்கொள்ள வேண்டும். அந்த நன்மைகளை மகிழ்வுடனே செய்ய வேண்டும். அது தான் மனிதத்திற்கு நன்மை என்கின்றார் பிரசங்கி எழுத்தாளனாகிய சாலமோன் ஞானி. **பிரசங்கி 3:12** "மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மைச் செய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன்."

அப்போஸ்தலனாகிய பவுலோ இன்னும் ஒருபடி மேலேபோய் நாம் அதற்காக தான் நம் பரலோக பிதாவினால் கிறிஸ்துவுக்குள் படைக்கப்பட்டோம் என கூறுகின்றார். **எபே 2:10** "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்."

நமது அடுத்த பொறுப்பு, **நற்செய்தியை அறிவிப்பதாகும்**. **1 கொரிந்தியர் 9:16,17** "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ. நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு; உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே.

உலகமெங்குமுள்ள அனைவருக்கும் அதனை சொல்ல வேண்டும் என்று ஆண்டவர் இயேசு கட்டளையிட்டுள்ளார் **(மாற். 16:15,16)**. நேரம் மற்றும் வாய்ப்பு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அதனை செய்யுங்கள் என்கின்றார் ஆவியானவர் **(2 தீமோ 4:2)**. அவர்கள் கேட்டாளும் சரி, கேட்காவிட்டாலும் சரி, சத்தியத்தினை சொல் என்கின்றார் பரமபிதா **(எசே 2:7)**.

**நன்றியுடன் பிதாவை தொழுதுகொள்ள வேண்டும். சங்கீதம் 116:12-14** "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை நான் எடுத்துக் கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்."

பரமபிதாவை தொழுதுகொள்ள வேண்டும் என்பது நம் தலையாய பொறுப்பாகும். நமது ஆண்டவர் இயேசு அதனை, ஆவியோடும், உண்மையோடும் செய்யும்படி கட்டளை பிறப்பித்துள்ளார், அதாவது முழு மனதுடன், கிறிஸ்துவின் போதனையின்படி தொழுகை செய்ய வேண்டும் **(யோவான் 4:23,24)**. மேலும் அவ்வாறு செய்வதே பிதாவின் விருப்பமாகவும் இருக்கின்றது. அதனை தவறாது, மற்றும் எக்காரணங்களிற்காகவும் தவிர்க்காது செய்ய வேண்டும் **(எபி 10:24-31)**.

**நற்சாட்சியாய் வாழ வேண்டும். 2தீமோத்தேயு 4:12-13** "உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு. நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்தி சொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு.

நம்மை ஆண்டவர் உலகத்திற்கு வெளிச்சமாகவும், பூமிக்கு உப்பாகவும் வைத்திருக்கின்றபடியினால், அதற்கேற்ற ஒரு வாழ்வு வாழ வேண்டியவர்களாக இருக்கின்றோம் **(மத் 5:13-16)**. இவைகளையெல்லாம் இந்த புவியில் உயிரோடிருக்கும் போதுதான் செய்ய முடியும். மரித்த பிறகு ஒன்றும் செய்ய முடியாது. எல்லாம் ஆடி அடங்கிவிடும் என்கின்றது கல்லறைகள். **பிரசங்கி 9:10** "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்; நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே. மேலும், **சங்.115:17** "மரித்தவர்களும் மௌனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள்".

இந்த வாழ்க்கை, வாழ்வதற்கு தான் கொடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் அந்த வாழ்வு தரமுள்ளதாக இருக்க வேண்டும். யானை

யானையாகவே வாழ வேண்டும். அது வேறொன்றாகவோ, மதம்பிடித்து வாழவோ முற்பட்டால், அதனால் பேராபத்து உண்டாகும் அல்லவா? நாமும், நம்மை கர்த்தர் படைத்த தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். அப்படி வாழ தவறுவது, மதம் பிடித்த யானைக்கு சமமாகின்றது. கர்த்தர் படைத்த தன்மையுடன், உதாரணமாக, நேர்மை மற்றும் தூய்மையுடன் வாழும்போது, இவ்வுலகம் நம்மை பரிகாசம் செய்யலாம்; பைத்தியம் என்று எண்ணலாம், அவ்வாறு வாழ்வதனை முட்டாள்தனம் எனவும், காலத்துக்கு ஏற்ப வாழப் பழகிக்கொள் எனவும் ஆலோசனைகள் சொல்லலாம். காரணம், இந்த சமூகத்தில், 'ஏமாற்றி பிழைப்பது புத்திசாலித்தனம்' என்று மிகவும் மட்டமாக சிந்திக்கும் சிந்தனைவாதிகள் பெருகிவிட்டனர்.

அவைகளுக்கெல்லாம் நாம் வலைந்துபோகாமல், நாம் நமது தூய்மை, நேர்மை, உண்மை எனும் தன்மையுடன் வாழ்வோமாக! அதுவே சாலச்சிறந்த முடிவாகவும், வாழ்வாகவும் இருக்கும். பொறுப்புகளை உணர்ந்து செயல்படுத்துவோம். பொறுப்பினை தட்டிக்கழிப்போர், செய்ய தவறுபவர்கள் கர்த்தருடைய கோபத்திற்கும், தண்டனைக்கும் உள்ளாவது உறுதியானதே. **லூக்கா 12:47** "தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான்."

### 3. முடிவு உண்டு [உனக்கும், எனக்கும்]

**யோவான் 5:28,29** "இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்."

அடுத்ததாக, கல்லறைகள் தனக்கும் மனிதனுக்கும் ஒரு முடிவு உண்டு என்பதனை அறிவிக்கின்றன. நிலையற்ற இவ்வுலகில் கல்லறைகள் நிலையானவை அல்ல, அவைகள் தற்காலிகமானதே! அவைகள் கிறிஸ்து வரும் நாளில், நெருப்பிற்கு இரையாகி இல்பொருளாகிவிடும் **(2 பேதுரு 3:10-12)**. அவைகள் தேடினாலும் கிடைக்காது என்பதனைவிட, இனி அவைகள் தேவைபடாது என்பதே நிதர்சனமான உண்மையாகும். ஏனெனில் மனிதன், தான் இழந்த நித்தியத்தினை மீண்டும் பெற்று, ஒன்று தண்டனையையோ, அல்லது மகிழ்ச்சியான வாழ்வையோ பெற வேண்டியவனாக இருக்கின்றான் **(தானியேல் 12:1-3)**.

அதாவது, கல்லறைகள் நாம் எங்கிருந்து வந்தோம்? ஏன் இங்கு இருக்கின்றோம்? என்பதனை அறிவிப்பது போல, எங்கு நாம் போவோம்? என்பதனையும் அறிவிக்கின்றன. தனக்கு மரணம் மற்றும் நோய் வந்துவிடக்கூடாது என, எந்நேரமும் பிரசித்திபெற்ற மருத்துவர்களை தன்னுடன் வைத்துக்கொண்டே அலைந்த மைக்கேல் ஜாக்சனுக்கு என்ன ஆனது என்பதனை உலகம் அறியும். தான் பெரிய மாவீரன், பலசாலி, புத்திசாலி என்ற கர்வத்துடன் வாழ்ந்தவர்களை எல்லாம் இந்த மண் (மரணம்) கவ்விக்கொண்டு போய்விட்டது.

மேலும், தன் சருமத்தினை பேணிகாக்க வாழ்நாள் முழுவதும் மெனக்கிட்ட பேரழிகளின் முகங்களையும், பயில்வான்களின் உடல்களையும் இந்த மண் (கல்லறை) தின்று தீர்த்துவிட்டது என்பதனையும் நாம் அறிவோம். ஏனெனில், நமது இந்த வாழ்வு என்பது நிலையற்றது. மேலும், இப்புவியில் நாளை என்பதும் நமக்கு நிச்சயமற்றது.

## சிறுவர்க்கான கேள்விகள்

1. மரித்துப்போன சூனேமியாளின் மகன் என்ன ஆனான்?
2. மரித்துப்போன லாசருவை, ஆண்டவர் இயேசு என்ன செய்தார்?
3. நாயீன் ஊர் விதவையின் மகனை எழுப்பியது யார்?
4. மரித்துப்போன யவீருவின் மகள் என்ன ஆனாள்?
5. உயிர்த்தெழுதல் என்பது நிச்சயமான ஒன்றா?

**யாக்கோபு 4:13–17** "மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கேஒ ருவருஷம்த ங்கி,வி யாபாரஞ்செ ய்து, சம்பாத்தியம்ப ண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள்.ந ாளைக்குந டப்பதுஉ ங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக் காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே.ஆ தலால்;ஆ ண்டவருக்குச் சித்தமானால்,ந ாங்களும்உ யிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்ல வேண்டும். இப்பொழுதுஉ ங்கள்வீ ம்புகளில் மேன்மைபாராட்டுகிறீர்கள்;இ ப்படிப்பட்டமே ன்மை பாராட்டல் யாவும் பொல்லாங்காயிருக்கிறது. ஆதலால் ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால்,அ துஅ வனுக்குப் பாவமாயிருக்கும்". ஆகையால் அதனை உணராதவர்களாய், நமது நித்தியத்தினை நாம் எங்கு செலவழிக்க விரும்புகின்றோமோ, அதற்கேற்ற வாழ்வை வாழும்படி கல்லறைகள் நமக்கு நினைவூட்டுகின்றன. ஏறக்குறைய 2000 ஆண்டுகளாக திறக்கப்பட்டுள்ள நமது ஆண்டவர் இயேசுவின் கல்லறை, நம்மால் அவ்வாறு வாழ முடியும், அதற்கு அவர் துணை செய்கின்றார் என ஊக்கப்படுத்துகின்றது மற்றும் நம்பிக்கையளிக்கின்றது **(லூக்கா 24: மத்தேயு 28).**

**இறுதியாக,**

பிரியமானவர்களே, கல்லறைகள், தனக்கும் மனிதனுக்கும் ஒரு துவக்கம் உண்டு என்பதனை அறிவிக்கின்றன என்பதிலிருந்து, நாம் எங்கிருந்து வந்தோம் என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. கல்லறைகள், தனக்கும் மனிதனுக்கும் ஒரு பொறுப்புகள் உண்டு என்பதனை அறிவிக்கின்றன என்பதிலிருந்து, நாம் ஏன் இங்கு இருக்கின்றோம்? என்பதனை அறிந்துகொண்டோம். கல்லறைகள் தனக்கும் மனிதனுக்கும் ஒரு முடிவு உண்டு என்பதனை அறிவிக்கின்றன என்பதிலிருந்து, நாம் எங்கு போகப் போகின்றோம் என்பதனையும் கற்றறிந்தோம். திறக்கப்பட்ட நமது ஆண்டவரின் கல்லறை, நாம் அவரைப் போல வாழ அவரது அழைப்பினையும், அவ்வாறு வாழ முடியும் என்கின்ற சத்தியத்தினையும் நமக்குச் சொல்லாமல் சொல்வதால், நமது சிந்தனையை சீர்தூக்கிப்பார்த்து, கல்லறைக்கு போகும் முன்னே கர்த்தரிடம் சேர்ந்து, அவர் கற்பித்த கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து, நம் மானுட கடமையை நிறைவேற்றுவோமாக! கர்த்தர் இந்த முயற்சியில், நமக்கு அவரது பெலத்தையும் கிருபையையும் ஒத்தாசையையும் தந்தருளுவாராக!

அன்புடன்,

**–ஆசிரியர்**


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : **92 4421 4421 & 92 4431 4431**) ***Nambikai TV :*** *Every Sunday 3.30 p.m.* ***Salvation TV :*** *Every Sunday 2.00 p.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m.

**Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 08842363722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 09844070763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

# உயிர்த்தெழுதலில் பெண்கள்

பிரியமானவர்களே உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

இயேசுவின் பிறப்பிலிருந்து இந்த பூமியில் அவர் வாழ்ந்த காலம் வரை அவருடைய ஊழியத்தில் ஒரு கூட்டப் பெண்கள் அவரைப் பின் தொடர்ந்தனர். **(லூக்கா 8:2,3)** அதில் குறிப்பாக சில பெண்கள், இயேசுவின் உயிர்த்தெழுதலின் சாட்சியாக கல்லறை வரை சென்றனர். அவர்கள் யார் என்று நாம் வேதத்தில் இருந்து தெரிந்துகொள்வோம்.

## 1. உயிர்த்தெழுதலில் பெண்கள்

- **லூக்கா 24:10** மகதலேனா மரியாள், யோவான்னாள், யாக்கோபின் தாயாகிய மரியாள் இவர்களுடனே கூட இருந்த மற்ற ஸ்திரிகளும்.
- **லூக்கா 8:3** மகூசாவின் மனைவியாகிய யோவான்னாளும், சூசன்னாளும், ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்து மற்ற அநேக ஸ்திரிகள்.

  அவள் தன் ஆஸ்திகளையும் இயேசுவின் ஊழியர்களுக்கு கொடுத்து உதவினாள்.

## 2. மகதலேனா மரியாள்

- ஏழு பிசாசுகள் நீக்கப்பட்ட ஸ்திரி பொல்லாத ஆவிகள், வியாதிகள் குணமாக்கப்பட்ட ஸ்திரிகள். **(லூக்கா 8:2, மாற்கு 16:9)**
- முதன் முதலில் தரிசனமானார். **(மாற்கு 16:9)**
- அநேக ஸ்திரிகள், மகதலேனா மரியாள், யாக்கோபு, யோசேப்பின் தாயாகிய மரியாளும், செபேதேயுவின் குமாரனுடைய தாயும். **(மத் 27:57)**
- மகதலேனா மரியாள், மற்ற மரியாளும், மகதலேனா மற்ற மரியாளும் **(மத் 27:61, 28:1), (மாற்கு 15:61, 40:49), (யோ 19:25)**
- மகதலேனா மரியாளும், சின்னயாக்கோபு, யோசேபுக்கு தாயாகிய மரியாளும் சலோமே **(மாற்கு 16:1, யோ 20:1)**
- இயேசுவின் உயிர்த்தெழுதலை பிறருக்கு சொன்னது **(லூக்கா 24:10)**

## 3. மரியாள் [இயேசுவின் தாய் மரியாள்]

- அவர் பெத்தலகேமில் இயேசுவை பெற்றெடுத்தார். அவரது மகன் மற்றும் அவரது கணவர் யோசேப்புடன் எகிப்துக்கு ஓரிரு ஆண்டுகள் குடிபெயர்ந்தார்.
- இயேசுவின் மரணதண்டனை மற்றும் அடக்கம் செய்யப்பட்டப்போது அவர் உயிர்த்தெழுந்தார் அவருடைய உயிர்த்தெழுதலை கண்டாள்.
- அவர் சிலுவையில் இருந்து தன் தாயை யோவானிடத்தில் ஒப்படைத்தார். **(யோ 19:25-29) (யோ 7:5, மத் 13:57), (மாற்கு 6:2,3), (அப் 1:14) (I கொரி 9:4-5), (கலா 1:19), (மாற்கு 6:3)**

## 4. மரியாள் [மரியாள், யாக்கோபு, யோசேப்பு]

- இயேசுவின் அடக்கம், உயிர்த்தெழுதல் போன்றவையின் சாட்சியாக இருந்தாள். **(மத் 27:61, 27:56) (மாற்கு 15:40,47)**

## 5. மரியாள் [கிலேயோப்பாவின் மரியாள்]

- இயேசுவை சிலுவையில் அறையப்பட்டதற்கு கலிலியன் சாட்சியாக இருந்தார். **(யோ 19:25)**

## 6. சாலோமே [யாக்கோபு, யோசேக்கும் தாய்]

- கலிலேயாவில் இயேசுவை பின் தொடர்ந்தார் இயேசுவின் சீடர்களில் ஒருவராக இருந்தார்.
- அவள் இயேசு சிலுவையில் அறையப்படுவதைக் கண்டு ஞாயிற்றுக்கிழமை கல்லறைக்குச் சென்றாள் **(மாற்கு 15:40, 16:1).**

பிரியமானவர்களே,

நல்ல நோக்கங்களைக் கொண்டிருப்பது எளிதானது ஆனால்,நோக்கங்கள் பலனைத் தராது செயல்கள் பலனைத் தரும்! ஆகவே, அன்பான பெண்களே! இயேசுவின் கல்லறை வரை அவரை பின்தொடர்ந்த பெண்களைப் போலவே, செயலில் ஈடுபடும் நபராக நாம் இருக்க வேண்டும் மற்றும் நம்முடைய நேரத்தை, வளங்களை மற்றவர்களுக்காகவும் சேவை, உதவி செய்யும்படி பயன்படுத்துவோம்.

மீண்டும் சந்திப்போம்...

**பி. பெவர்லி லிதியா கிங்ஸ்லி**

பிரியமான வாலிப தம்பி தங்கைகளுக்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாதம் மரித்து உயிர்த்தெழுப்பப்பட்ட ஒரு வாலிப சகோதரனைப் பற்றி படிக்கலாம்.

அப். 20ம் அதிகாரம் 7ல் இருந்து 12 வசனங்களில் தொழுகை வேலையில் பவுலின் பிரசங்க செய்தியை கேட்க ஒரு வாலிபன் அங்கே வந்திருந்தான். அவன் பெயர் ஐத்திகு. இந்த வாலிபன் கர்த்தருடைய வசனத்தின் மீது அதிக தாகமுள்ள ஒருவராக இருந்தான். ஏனென்றால் இரவு ஆகியும் வசனத்தை கேட்பதில் அவன் சோர்ந்து போகவில்லை.

சபை ஐக்கியம் முக்கியம் என்பதை உணர்ந்திருந்த ஐத்திகு மற்ற உலக ஐக்கியத்தைவிட தேவப் பிள்ளைகளோடு தன் ஐக்கியத்தை வைத்திருந்தவனாகவும் இருந்தான். அவன் சோம்பேறியாகவும் இருக்கவில்லை. கடவுளுடைய வார்த்தையை கற்றுக்கொள்வது எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு கடவுளின் பிரசன்னத்தோடு இருப்பது முக்கியம் என்பதையும் உணர்ந்து இருந்தான். இவன் ஒரு மனிதன் கர்த்தருடன் சந்திக்கக்கூடிய வல்லமையான சந்திப்பை தொழுகையில் பெற்றிருந்தார்.

இப்படி பக்தியுள்ள ஒரு ஆத்துமா நீண்ட நேர செய்தியை ஜன்னலில் தொங்கியபடி கேட்டுக் கொண்டிருந்து ஐத்திகு மயங்கி மாடியிலிருந்து விழுந்து இறக்கும் நிலை ஏற்படுகிறது. இவன் வந்த நோக்கம் சிறந்தது. கர்த்தருடைய பிள்ளைகளோடு பரிசுத்த உறவில் இருந்து, கர்த்தருடைய வார்த்தையின்படி ஆவிக்குள்ளான மனுஷனாக சீர்படுத்தி, கர்த்தரின் பந்தியில் பங்குபெற்று ஆவியில் புத்துயிர் பெற்று செல்ல வந்தவன் சரீரத்தில் மரிக்கும் தருவாய் வருகிறது. ஆனால் இந்த துக்க வேலையை தேவன் பவுல் மூலமாக மகிமையின் வேலையாக அதாவது ஆண்டவர் இயேசு மறுபடியும் இந்த பூமிக்கு வரும்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் என்பதைப் போல, இந்த ஐத்திகு உயிருள்ள ஒரு சாட்சியாக பவுல் மூலமாக உயிரோடு எழுப்பப்படுகின்றான். கிறிஸ்தவர்களுக்கென்று ஒரு மாபெரும் நம்பிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதுதான் உயிர்த்தெழுதலாம். பிரியமானவர்களே, கர்த்தருடனான இந்த வாழ்க்கையிலே, தொடர்ந்து விசுவாசமுடையவர்களாய் இருக்கும் போது, உயிர்த்தெழுதலின் அதிக நம்பிக்கையுள்ளவர்களாய் வாழ்வோம். ஐத்திகு வசனத்தையும், தேவ ஐக்கியத்தையும் அதிகம் விரும்பியதால் உயிர்த்தெழுந்த சாட்சியாக முதல் நூற்றாண்டு சபையில் நிகழ்ந்ததை நாம் பார்க்கிறோம். கிறிஸ்தவத்தின் நம்பிக்கையான உயிர்த்தெழுதல், கடவுளுடன் வாழ்கின்ற ஒரு உன்னத உறவு அதாவது மரணத்திற்கு பிறகும் வாழும் ஒரு உயிருள்ள வாழ்க்கை உயிர்த்தெழுதல் நமக்கு கற்றுத்தருகிறது.

– உங்கள் அண்ணன்

**JP**

**வாசகர்களின் கவனத்திற்கு**

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-

No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

# வரலாற்றில் கிறிஸ்துவைப் பற்றிய ஆதாரங்கள்

- ADY

பாடம் - 3

## தொல்பொருள் ஆராய்ச்சியிலிருந்து சாட்சியங்கள்

## Evidence from Achaeology

### காய்பாவின் கல்லறைக் குகை:

1990ல் ஒரு கூட்ட கட்டிடப் பணியாளர்கள் ஒரு தண்ணீர் பூங்காவை எருசலேமில் கட்டிக் கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக ஒரு பண்டைய கல்லறைக்குகையை தோண்டிக் கண்டுபிடித்தனர். அந்தக் கல்லறைக் குகையில் அறுபது வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலத்தை கண்டார்கள்; அது பிரதான ஆசாரியனாகிய காய்பாவாக இருக்கலாம் என்று கருதப்பட்டது. உடைந்திருந்த அந்தப் பெட்டகத்தின் மேல் (அவரது எலும்புகளைக் கொண்டிருந்த கல்லினால் செய்யப்பட்ட பெட்டி) யெகோசெஃப்பார் கயாஃபா (காய்பாவின் குமாரனாகிய காய்பா) என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. அந்தக் குகையில் காணப்பட்ட வெண்கலக் காசுகள், முதலாம் ஏரோது அக்ரிப்பாவின் ஆளுகை காலத்தில் கி.பி. 45-43ல் அடிக்கப்பட்ட நாணயங்கள்.

ஜோசிபஸ் (வரலாற்று ஆசிரியர்) குறிப்பிடும்போது, யோசேப்பு என்பவர் காய்பா என்றும் அழைக்கப்பட்டவர். கி.பி. 18லிருந்து 36 வரையிலான ஆண்டுகளில் எருசலேமில் பிரதான ஆசாரியனாக இருந்தார். யோசேப்பு என்பது அவருக்கு இடப்பட்ட பெயர். காய்பா என்பது அவருக்கு கொடுக்கப்பட்ட செல்லப் பெயர்.

### வேறு சில அகழ்வாராய்ச்சி கண்டுபிடிப்புகள் :

மீண்டும் மீண்டும் புதைபொருள் ஆராய்ச்சியின் மூலம் புதிய ஏற்பாட்டின் சரியான வரலாற்று மதிப்பீடு உறுதி செய்யப்பட்டது. பிரச்சனைக்குரிய இடங்களெல்லாம் ஒவ்வொன்றாக கண்டுபிடிக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டது.

அகழ்வாராய்ச்சியாளர்களுக்கு நன்றி! இப்பொழுதும் நாம் பெத்லகேமில் இயேசுவின் பிறப்பிடத்தை போய் பார்வையிடலாம். இயேசு வளர்ந்த நாசரேத்து ஊரைக்காணலாம். அசுத்த ஆவிபிடித்திருந்த ஒரு மனுஷனை கப்பர் நகூம் ஜெப ஆலயத்தில் இயேசு சுகமாக்கிய இடத்தைக் காணலாம். இயேசு சுகப்படுத்திய பேதுருவின் மாமியார் வீட்டைக் காணலாம். இயேசு ஒரு பிறவிக் குருடனை சுகப்படுத்திய சீலோவாம் குளத்தைக் காணலாம். இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட இரவு தனிமையில் ஜெபித்த கெத்சமனேத் தோட்டத்தைக் காணலாம். இயேசு கிறிஸ்து விசாரிக்கப்படும்படி எருசேலமுக்குள் நுழைந்த பொன் வாசலைக் காணலாம். அங்கு அவர் வாரினால் அடிக்கப்பட்டு மரண ஆக்கினைக் குள்ளாக்கப்பட்டார். இயேசு பிலாத்துவினால் மரண ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டபோது, இயேசு நின்றுகொண்டிருந்த சமதள மேடையையும், கிறிஸ்து தமது சிலுவையை சுமந்து கொண்டு மிகுந்த வலியினூடே சென்ற கல்வாரிப்பாதையில் நடக்கலாம். எம்மாவூருக்குச் செல்லும் பாதையில் விரக்தியுடன் போய்க்கொண்டிருந்து இரண்டு சீஷர்களுடன் தாம் உயிர்த்தெழுந்த பின் தரிசனம் கொடுத்த இடத்திற்கு மெதுவே நடந்து உலாச் செல்லலாம்.

### முடிவுரை :

இந்தப் பாடத்தில் புதிய ஏற்பாட்டின் சரியான உண்மை தன்மையை நிரூபிக்க, அகழ்வாராய்ச்சியாளர் மேற்கொண்ட கண்டுபிடிப்புகளில் சிலவற்றை மட்டுமே மாதிரிக்காக் கண்டோம். 'நெல்ஸன் குளுயிக்' எனும் யூத புதைபொருள் ஆராய்ச்சியாளர் "எந்தவொரு அகழ்வாராய்ச்சி கண்டுபிடிப்பும் திருமுறை குறிப்புகளுக்கு முரணானவைகளாக ஒருபோதும் இருந்ததில்லை என்று எந்தவித சந்தேகமுமின்றி நம்மால் சொல்ல முடியும்" என்று சொன்னார். இன்னொரு வார்த்தையில் சொன்னால், திருமறைக்கும் அகழ்வாராய்ச்சிக்குமிடையே எந்தவொரு முரண்பாடும் ஏற்பட்டதில்லை.

"சர் வில்லியம் ராம்ஸே" எப்பொழுதுமே ஒருமிகப் பெரிய அகழ்வாராய்ச்சியாளர்களில் ஒருவர் என அறியப்பட்டவர்; அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் முற்றிலும் வரலாற்று தவறுகளைக் கொண்டது என்று சொன்னார். ஆயினும் அவரது கண்டு பிடிப்புகளே, அவரது எண்ணத்தைத் திரும்பப் பெற வைத்தது. அவர் "லூக்காவின் வரலாற்றுக் குறிப்புகளின் விளக்கம் அதிசயமான சத்தியங்களைக் காட்டுகிறது" என்றார்.

முடிவில் சர்வில்லியம் ராம்ஸே, லூக்கா ஒரு முதல் தரமான அந்தஸ்து பெற்ற ஒரு வரலாற்று ஆசிரியர்; அவர் வெளியிட்ட உண்மைகள் நம்பத்தகுந்தவை மட்டுமல்ல, ஆனால் அவர் உண்மையான வரலாற்று நுட்பத்தைப் பெற்றிருந்தவர்... சுருங்கச் சொல்லின் இந்தபுத்தக ஆசிரியர் மிகப்பெரிய வரலாற்று ஆசிரியர்களின் வரிசையில் இடம்பெற வேண்டியவர் என்றார்.

சார்ப்புத்தன்மை பெற்ற புதிய ஏற்பாட்டு பதிவேடுகள் அகழ்வாராய்ச்சி அறிவியல் கண்டுபிடிப்புகளால் தொடர்ந்து உறுதியாக்கப்படுகிறது.

– அடுத்த இதழில் தொடரும்...

# லாசருவின் உயிர்த்தெழுதல்

கடவுளுக்கு பிரியமான அன்பு செல்லப் பிள்ளைகளா, உங்கள் அனைவரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.


பிள்ளைகளா ! பெத்தானியா என்னும் ஒரு கிராமம் இருந்தது, அங்கு மார்த்தாள், மரியாள் என்னும் இரண்டு சகோதரிகள் இருந்தார்கள். அவர்களுக்கு ஒரு சகோதரன் இருந்தான். அவன் பெயர் என்ன தெரியுமா? லாசரு. ஆண்டவர் இயேசு, வேறொரு கிராமத்தில் ஊழியத்தில் இருக்கும்போது, பெத்தானியா கிராமத்தில் இருந்து சிலர் வந்து, ஆண்டவர் இயேசுவிடம் லாசரு வியாதியுள்ளவனாக இருக்கிறான் என்று தகவல் கொடுக்கிறார்கள். அவர்களை தகவல் கொடுக்கும்படி மார்த்தாளும் மரியாளும் அனுப்பியிருந்தார்கள்.

ஆண்டவர் இயேசு, அந்த செய்தியை அறிந்து, தன்னுடைய சீடர்களை பார்த்து, லாசருவின் இந்த வியாதி மரணத்திற்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமைக்கு ஏதுவாயிருக்கிறது என்று சொன்னார்.

பிற்பாடு இயேசு தன் சீஷர்களிடம் நான் நேசிக்கிற லாசரு மரித்துப் போய்விட்டான், நான் அவனை உயிரோடு எழுப்பப் போகிறேன். ஆகையால் அனைவரும் பெத்தானியா போகலாம் வாருங்கள் என்றார். பாருங்கள், லாசரு மரித்து நான்கு நாளுக்கு பிற்பாடு இயேசு போகிறார். மார்த்தாளும் மரியாளும் இயேசுவை பார்த்து நீர் இங்கு இருந்திருந்தால் என் சகோதரன் மரித்துப்போகியிருக்கமாட்டான் என்று சொன்னார்கள்.

கடவுளுக்கு பிரியமானவர்களே, உடனே இயேசு என்ன செய்தார் தெரியுமா? லாசருவை வைத்த கல்லறை எங்கே என்றார்? அதற்குத் தன்னை அழைத்துச்செல்ல கட்டளையிட்டார். அவர்களோ, நான்கு நாள் ஆனதினால், நாறுமே என்று புலம்பினர். ஆயினும் ஆண்டவர் இயேசு சொன்னபடியே அவரை அழைத்துச் சென்றனர். ஆண்டவர் இயேசு அங்கு போய், " லாசருவே வெளியே வா" என்று சத்தமிட்டு அழைத்தார். என்ன ஆச்சரியம் மரித்து நான்கு நாட்கள் ஆன லாசரு உயிரோடே வெளியே வந்தார். இதனை கண்ட அந்த கிராம மக்கள் அனைவரும் பிதாவிற்கு நன்றி சொல்லி அவரை மகிமைப்படுத்தினர்.

செல்லங்களா ! மரணம் என்பது எல்லாருக்கும் வரும். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில்



மரித்துப்போன எல்லாரையும் அவர் எழுப்புவார். எல்லாருக்கும் நியாயத்தீர்ப்பு நடக்கும். பூமியில் நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் நியாயதீர்ப்பு உண்டு. நீங்கள் அப்பா அம்மாவுக்கு கீழ்ப்படியவில்லை என்றால், ஒழுங்காக படிக்கவில்லை என்றால், சபைக்கு ஒழுங்காக போகவில்லை என்றால், வசனத்தை கவனிக்கவில்லை என்றால், சபையில் சின்னச்சின்ன வேலைகள் செய்யனும், முடியாதவர்களுக்கு தண்ணீர் எடுத்துக் கொடுக்கலாம். இப்படி செய்யவில்லை என்றால், கர்த்தர் உயித்தெழுதல் நாளில் நியாயத்தீர்ப்பின் போது கணக்கு கேட்பார். அதனால் கடவுளுக்கு பிரியமான செயல் செய்து உயிர்த்தெழுதல் நாளில் பரலோகத்திற்குச் செல்ல நம்மை ஆயத்தப்படுத்துவோம்.

**மனப்பாட வசனம் : யோவான் 11:25** "இயேசு அவளைநோக்கி; நானே உயிர்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்,என்னைவிசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்".

**– அன்பு ஏசுதாஸ்**

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. அபி சூர்யா – சித்தோடு
2. சஞ்சய் – சித்தோடு
3. M. ஜோனா – கரூர்
4. M. ராஜா – கரூர்
5. பீட்டர் – பட்டுத்துறை
6. A. ஹானாஜோதி – மதுரை
7. A. கார்பஸ் பிலேமோன் – மதுரை

# சூனேமிய பெண்ணின் மகன்





ஹாய் குட்டீஸ் ! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இஸ்ரவேல் என்ற தேசத்தில் எலிசா என்ற தீர்க்கதரிசியும் அவன் வேலைக்காரனாகிய கேயாசியும் வாழ்ந்து வந்தார்கள்.

அவர்கள் ஒருநாள் சூனேம் என்ற ஊருக்கு போனார்கள். அந்த ஊரிலுள்ள பணக்கார பெண்மணி ஒருத்தி கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலிசாவை தன் வீட்டில் வந்து உணவு உண்ணும்படி வருந்தி கேட்டுக்கொண்டாள். எலிசா அந்த ஊரின் வழியாக செல்லும்போதெல்லாம் அவள் வீட்டிலே உணவு உண்டு செல்வது வழக்கம். அதனாலே அந்த சூனேம் பெண்மணியும் அவள் கணவனும் சேர்ந்து தங்கள் வீட்டு மாடியில் ஒரு சிறிய அறையைக் கட்டி அதிலே கட்டில், மேஜை, நாற்காலி, விளக்கு போன்றவைகளையும் வைத்தார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசியை எலிசா தன் வேலைக்காரருடன் அந்த மேல்வீட்டு அறையிலே தங்கிச் செல்வார்.

அப்படி ஒரு முறை எலிசா அந்த மேல்வீட்டு அறையில் தங்கியிருக்கும்போது, அந்த பெண்மணியை அழைத்து எங்களுக்கு இவ்வளவு உதவிகளையும் உபசரனைகளையும் செய்கிறாயே நாங்கள் உனக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமா என்று கேட்டார். அதற்கு அவள், நான் இந்த ஊரிலே நன்றாக வாழ்கிறேன். எனக்கு ஒரு குறையுமில்லை என்றாள். அவர்களுக்கு பிள்ளையில்லை என்பதை தன் வேலைக்காரன் மூலம் அறிந்து அவளை அழைத்தனுப்பி குறித்த காலத்தில் தேவன் உனக்கு ஒரு பிள்ளையைக் கொடுப்பார் என்று சொன்னார்.

எலிசா சொன்னது போலவே அவளுக்கு ஒரு மகன் பிறந்தான், வளர்ந்தான் ஒரு நாள் அந்தப் பிள்ளை மிகுந்த தலைவலியால் அவதிப்பட்டு தன் தாயின் மடியிலேயே இறந்து போனான். பிள்ளையின் தாய் அவன் உடலை மேல் வீட்டு அறையின் கட்டிலில் போட்டுவிட்டு, ஒரு வேலையாளை கூட்டிக் கொண்டு கழுதையின்மேல் ஏறி கர்த்தருடைய தீர்க்கதரிசயாக எலிசாவிடம் சென்று நடந்ததைச் சொல்லி அழைத்து வந்தாள். எலிசா பிள்ளையின் உடலிருந்த மேல் வீட்டு அறைக்குள் சென்று கதவைப் பூட்டினான். தேவனை நோக்கி ஜெபஞ் செய்து, பிள்ளையின்மேல் இரண்டு முறை படுத்துக்கொண்டான். அந்தப்பிள்ளை 7 முறை தும்மித் தன் கண்களைத் திறந்தான் மீண்டும் உயிர்ப்பெற்றான்.

குட்டீஸ் ! இந்த பூமியில் நாம் இறந்து போவதோடு நம் வாழ்க்கை முடிவதில்லை. இயேசு கிறிஸ்து மீண்டும் வரும்போது மரித்த எல்லாரும் உயிரோடெழுந்திருப் போம். அதனால் இந்த பூமியில் வாழும் போது அப்பா அம்மா சொல்றபேச்சை சபையில் ஊழியக்காரர்கள் சொல்றபேச்சைக் கேட்டு கீழ்ப்படிந்து நடந்தால் இயேசுவோடு பரலோகம் போகலாம்.

**மனப்பாட வசனம் : 1 கொரிந்தியர் 15:44**

“ஜென்மசரீரம்வி தைக்கப்படும்.ஆ விக்குரியச ரீரம் எழுந்திருக்கும்;ெ ஜன்மசரீரமுமுண்டு,ஆ விக்குரிய சரீரமுமுண்டு.”

**– குமினி பிரதீப்**

## மரித்தோரின் உயிர்த்தெழுதல் எப்படி இருக்கும்?



அழிவுள்ளதாய் விதைக்கப்பட்டவைகள்
அழிவில்லாததாய் எழுந்திருக்கும்
கனவீனமுள்ளதாய் விதைக்கப்பட்டவைகள்
மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்
பலவீனமுள்ளதாய் விதைக்கப்பட்டவைகள்
பலமுள்ளதாய் எழுந்திருக்கும்
விதைக்கப்பட்ட ஜென்மசரீரம்
ஆவிக்குரிய சரீரமாய் எழுந்திருக்கும்
ஏனெனில் பிந்தின ஆதாமாகிய
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து
உயிர்ப்பிக்கின்ற ஆவியாக இருக்கின்றார்.

– 1 கொரி 15:42-45

# யவீருவின் மகள்


அன்பான மழலை செல்லங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயராலே அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதம் ஆண்டவர் இயேசு, ஒரு சிறுபெண்ணை உயிரோடு எழுப்பிய உண்மை சம்பவத்தினை பற்றி படிக்கலாமா?

நமது ஆண்டவர் இயேசு, இந்த பூமியில் ஊழியம் செய்த நாட்களில் அநேக அற்புதங்களை செய்தார். அப்பொழுது ஒரு கிராமத்திலே அவர் பேசிக்கொண்டிருக்கையில், ஜெப ஆலயத்தின் தலைவனாகிய யவீரு என்பவன் வந்து, ஆண்டவருடைய பாதத்தில் விழுந்து, பன்னிரண்டு வயதுள்ள தன்னுடைய ஒரே குமாரத்தி மரண அவஸ்தையாயிருந்தபடியால், தன் வீட்டிற்கு வந்து, தன் மகள் ஆரோக்கியம் அடையும்படிக்கு, அவள்மேல் உமது கைகளை வையும், அப்பொழுது பிழைப்பாள் என்று அவரை மிகவும் வேண்டிக்கொண்டான்.

ஆண்டவர் இயேசு, அவனோடேகூடப் போனார். திரளான ஜனங்கள் அவருக்குப் பின் சென்று, அவரை நெருக்கினார்கள். அப்பொழுது ஜெப ஆலயத்தலைவனுடைய வீட்டிலிருந்து சிலர் வந்து; உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள், இனி போதகரை வருத்தப்படுத்த வேண்டாம் என்றார்கள். அவர்கள் சொன்ன வார்த்தையை ஆண்டவர் இயேசு கேட்டவுடனே, ஜெப ஆலயத்தலைவனை நோக்கி; பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு என்று தைரியப்படுத்தினார்.

பேதுருவையும், யாக்கோபையும், யாக்கோபின் சகோதரன் யோவானையும் கூட்டிக்கொண்டு ஜெப ஆலயத்தலைவனுடைய வீட்டிலே வந்து, அழுகிறவர்களை பார்த்து, அழாதேயுங்கள் அந்தப் பெண் மரிக்கவில்லை என்று சொன்னார். அதனை கேட்டவர்கள் அனைவரும் சிரித்தனர்.

ஆண்டவர் இயேசு, பெண்ணின் தகப்பனையும், தாயையும் கூட்டிக்கொண்டு, மரித்துப்போன அந்தப் பெண் இருக்கும் இடத்திற்கு வந்து அவளை நோக்கி, சிறுபெண்ணே எழுந்திரு என்று சொன்னார். என்ன ஆச்சரியம் மரித்துப்போன அந்த சிறுபெண் உடனே உயிரோடு எழுந்துவந்தாள்.



செல்லங்களே, ஆண்டவர் இயேசு இந்த உலகத்தினை நியாயந்தீர்க்க வரும்போது, ஆண்டவர் குரல் கேட்டு, உலகத்தில் மரித்துப்போன அனைவருமே உயிரோடே வருவார்கள். ஒரு வேளை நாமும் மரித்துப்போயிருந்தால், நாமும் உயிரோடே எழுந்து வருவோம். அப்பொழுது நாம் செய்த நன்மைக்கும், தீமைக்கும் தக்க பலனை அவர தருவார். ஆகையால் உயிரோடிருக்கும் நாளெல்லாம், கர்த்தருக்கு பயந்து வாழ்வோம்.

**மனப்பாட வசனம் : யோவான் 5:28,29** "இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ளஅ னைவரும்அ வருடைய சத்தத்தைக்கே கட்குங்காலம்வ ரும்;அ ப்பொழுது, நன்மைசெ ய்தவர்கள்ஜீ வனைஅ டையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும்,தீ மைசெய்தவர்கள் ஆக்கினையைஅ டையும்படிஎ ழுந்திருக் கிறவர்களாகவும் புறப்படுவார்கள்."

– பிரியா ஆண்டனி

## பொதுவான செய்திகள்

### இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழர்கள்

**ஊமைத்துரை** (இயற்பெயர் : குமாரசாமி)

ஒரு தென் இந்திய பாளையக்காரர் ஆவார். வீரபாண்டிய கட்டபொம்மனின் தம்பியான இவர் பாளையக்காரர் போர்களில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார். தமிழ் நாட்டார் தரவுகள் இவரது பேச்சாற்றலைப் பகடி செய்யும் வண்ணம் இவருக்கு "ஊமைத்துரை" என்று பட்டப்பெயர் வந்ததாகச் சொல்கின்றன.

ஊமைத்துரை நட்புணர்வும், மனிதாபிமானமும் கொண்டிருந்தவர் என்று வரலாறு கூறுகிறது. மருதுபாண்டியர், வெள்ளையத்தேவன், தீரன் சின்னமலை, விருப்பாச்சி கோபால நாயக்கர் மற்றும் எல்லைத் தகராறு காரணமாக பகையாளியாகக் கருதப்பட்ட எட்டயபுரம் பாளையக்காரர்கள் இவர்கள் அனைவரிடத்தும் நட்போடு பழகி வாழ்ந்து வந்தார்.

ஆங்கிலேயர்கள் பலரை அழித்த ஊமைத்துரை அவரிடம் அடைக்கலம் கேட்டு வந்த ஆங்கிலேயர்களையும் அரவணைத்து நட்போடு உபசரித்து அனுப்பினார் என்று ஆங்கிலேய ஆவணங்களில் உள்ளது. ஆங்கிலேயர்களால் வீழ்த்தப்பட்டு 1801 நவம்பர் 16ம் நாள் இவரும் மருதுசகோதரர்களும் தூக்கிலிடப்பட்டனர்.

# நாயீன் ஊர் விதவையின் மகன்



ஹாய் செல்லக்குட்டீஸ் ! உங்கள் எல்லாருக்கும் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினாலே வாழ்த்துக்கள் மற்றும் ஸ்தோத்திரங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயேசு கிறிஸ்து செய்த அநேக அற்புதங்களைக் குறித்துப் படித்திருப்போம். இந்த மாதம் வேதாகமத்திலிருந்து ஒரு சிறப்பான சம்பவத்தைப் பற்றிப் பார்க்கலாமா குட்டீஸ்.

படை அதிகாரியின் வேலைக்காரனைக் குணமாக்கிய பிறகு இயேசு கப்பர்நகூமிலிருந்து புறப்படுகிறார். அங்கிருந்து தென்மேற்கில் இருக்கும் நாயீன் என்ற ஊருக்குப் போவதற்காக பயணம் செய்கிறார். இயேசுவின் சீஷர்களும், திரளான மக்களும் அவரோடு போகிறார்கள். நாயீன் ஊருக்கு பக்கத்தில் வரும்போது, அங்கே இறந்துப்போன ஒரு இளைஞனை ஊருக்கு வெளியே புதைப்பதற்காகச் சிலர் பாடையைத் தூக்கிக்கொண்டு போவதை இயேசுவும், மற்றவர்களும் பார்க்கிறார்கள். அந்த ஊர்வலத்தில் அநேக யூதர்களும் செல்கிறார்கள்.

அந்த இளைஞனின் அம்மா மிகவும் சோகமாக இருக்கிறாள். அவள் ஒரு விதவை, இப்போது அவளுடைய ஒரே மகனும் இறந்துவிட்டான். அவளுடைய கணவர், இறந்தபோது அவளுடைய அன்பான மகன். அவளுக்குத் துணையாக இருந்தான். இனி தன்னுடைய வாழ்க்கையே அவன்தான் என்று நினைத்திருந்தாள். வயதான காலத்தில் தன்னைப் பார்த்துக்கொள்வான் என்று நம்பிக்கையோடு இருந்திருப்பாள். ஆனால், இப்போது மரித்துவிட்டான்? இனி யார் அவளைப் பார்த்துக்கொள்வார்?

துக்கம் தாங்க முடியாமல் அந்த தாய் அழுதுகொண்டே போகிறாள். இயேசு அவளைப் பார்த்து, அவருடைய உள்ளம் உருகி, கனிவாக, நம்பிக்கையூட்டும் விதமாக, "அழாதே" என்று



சொல்கிறார். அதுமட்டுமல்ல "பாடைக்குப் பக்கத்தில் போய் தொடுகிறார்". அவர் செய்வதையெல்லாம் பார்த்து அந்த ஊர்வலத்தில் வந்துக்கொண்டிருக்கிற மக்கள் அப்படியே திகைத்துப்போய் நின்றார்கள்.

இயேசு அநேக அற்புதங்களைச் செய்வதை அவர்கள் பார்த்திருக்கிறார்கள். பல்வேறு நோய்களை அவர் குணமாக்குவதையும் பார்த்திருக்கிறார்கள். ஆனால், அவர் யாரையும் உயிரோடு எழுப்பியதை பார்த்திருக்கமாட்டார்கள்.

இயேசு அந்தப் பாடையைத் தொட்டு, "இளைஞனே நான் உனக்குச் சொல்கிறேன்; எழுந்திரு!" என்று கட்டளையிடுகிறார் உடனே அந்த இளைஞன் எழுந்து உட்கார்ந்து பேச ஆரம்பிக்கிறான், இயேசு அவனை அவன் அம்மாவிடம் ஒப்படைக்கிறார். இனிமேல் அந்த விதவை தனிமரம் அல்ல!

அந்த இளைஞன் உயிரோடு எழுந்ததைப் பார்த்ததும், அவனுக்கு உயிர்கொடுத்த தேவனைப் புகழ்கிறார்கள். கடவுளாகிய தேவன் தம்மிடத்தில் நம்பிக்கைக் கொண்டவர்களுக்கு உதவுகிறார் என்ற செய்தி எங்கும் பரவியது.

என்ன செல்லங்களா ! இந்த உயிர்த்தெழுதல் சம்பவம் மிகவும் ஆச்சரியமாகவும், அதேநேரத்தில் அற்புதமாகவும் இருந்ததா? மீண்டும் அடுத்த மாதம் வேறொரு சிறப்பான சம்பவத்தைக் கூறுகிறேன்.

**மனப்பாட வசனம் : 1 தெசலோனிக்கேயர் 4:16**

"ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடையச த்தத்தோடும்,தே வன க்காளத்தோடும் வானத்திலிருந்துஇ றங்கிவ ருவார்;அ ப்பொழுது கிறிஸ்துவுக்குள்ம ரித்தவர்கள்மு தலாவது எழுந்திருப்பார்கள்."

**– ரா. ஏஞ்சலின் கமலம்**

இம்மாதம் பிறந்த நாள் மற்றும்
திருமண நாளைக் காணும்
வாசகர்கள் அனைவருக்கும்
கிருபையுள்ள வார்த்தை
ஆசிரியர் குழுவின் சார்பாக
வாழ்த்துக்களும், ஜெபங்களும் !

## நவம்பர் மாத கேள்விகள்

1. மனுஷகுமாரனுடைய சத்தத்தினை கேட்கும் காலம் யாருக்கு வரும்?
2. பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்கள் எதற்காக எழுந்திருப்பர்?
3. எது இரண்டாம் மரணம் என யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டது?
4. மரித்தோராகிய சிறியோரும் பெரியோரும் எங்கே நின்றனர்?
5. இளமை குறித்து அசட்டைபண்ணாதபடிக்கு எப்படி இருக்க வேண்டும்?
6. சங்கீதக்காரன், யாரெல்லாம் கர்த்தரை துதியார்கள் என்கின்றார்?
7. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது என யாக்கோபு கூறுகின்றார்?
8. நீ போகின்ற பாதாளத்திலே எவைகள் இல்லை என பிரசங்கி சொல்கின்றார்?
9. அழிவுள்ளதாய் விதைக்கப்பட்டது எவ்வாறு எழுந்திருக்கும்?
10. உயிர்த்தெழுந்த ஆண்டவரை முதன்முதலில் தரிசித்தது யார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 5-12-2022**

**அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. லேவி 19:32 | 6. நீதி 23:22 |
| 2. சங் 92:15 | 7. 1 தீமோ 5:7 |
| 3. 1 தீமோ 5:1,2 | 8. 2 கொரி 12:9 |
| 4. 1 ராஜா 12:8 | 9. 75 வயது |
| 5. யோபு 32:4 | 10. 89 வயது |



### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
2. Mrs. G. ஏஞ்சலம்மாள் - மதுரை
3. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் - மதுரை
4. J. விஜய் - மதுரை
5. D. எபிநேகர் - சித்தோடு
6. K. ராஜா - அந்தியூர்
7. செ. காயத்ரி - அந்தியூர்
8. G. ஜீவா - சித்தோடு
9. Mrs. S. சூரியபிரியா - மதுரை
10. Mrs. M. ஈஸ்வரி முருகன் - கரூர்
11. N. எஸ்தர் நவீன் - பட்டுத்துறை
12. M. பழனியம்மாள் - தங்கமேடு
13. S. நவீன்குமார் - பட்டுத்துறை
14. M. அன்பழகன் - தங்கமேடு
15. T. ரூபரேகா - தங்கமேடு
16. G. ரஞ்சித் - தங்கமேடு
17. Mrs. S. பேபி சந்தோஸ் - தங்கமேடு
18. Mrs. மேரிராஜ் - மதுரை
19. G. பீற்றர் பால்ராஜ் - தூத்துக்குடி
20. Mrs. P. சமாதானம் பீட்டர் - விருதுநகர்
21. Mrs. சாந்தி வில்லியம் - புதுக்கோட்டை
22. Mrs. ஹெலன் திலக் - புதுக்கோட்டை
23. Mrs. அன்னத்தாய் ஆல்பர்ட் - தூத்துக்குடி
24. Mrs. பியூலா ஜேசுராஜன் - புதுச்சேரி
25. S. அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
26. Mrs. சாந்தி வில்லியம் - திருச்சி
27. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
28. Mrs. தேவி ராஜாசிங் - திருப்பூர்
29. Mrs. J. சுந்தரபாய் வில்லியம் - சேலம்
30. Mrs. காந்தா மனோகரன் - திருச்சி
31. A. டேவிட் ஜெயச்சந்திரன் - மதுரை
32. A. லலிதா - புதுக்கோட்டை
33. Mr. டேவிட் சாந்தகுமார் - தென்காசி
34. R. ஞானசிரோன்மணி - மதுரை
35. S. பாக்கியராஜம் - மதுரை
36. Mrs. P. உமாராணி - சித்தோடு
37. Mrs. மீனாள் - மூலனூர்
38. Mrs. R.P. டேவிட் - சேலம்
39. B. ஜாய்ஸ் ஜோசுவா - வெள்ளறம்
40. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
41. S.G. சேகர் - ராணிபேட்டை
42. J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் - மதுரை
43. Mrs. சித்ரா மேபல் - திருச்சி
44. R. சரோஜா - தென்கலம்
45. Mr. A. ஆனந்த கதிரோன் - சென்னை
46. J. ஜான்சி - ஆனைமலை
47. Mrs. ஸ்டெல்லா ஜெபகுமார் - நெல்லை

Place of Publication : Arasaradi, Madurai
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at Classic Printers & Binders Madurai-2 ✆ 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2021 - 2023
Date of Publication : 8th November 2022
Posted at Arasaradi HPO on 10th 11th November 2022


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்






அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/–மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்






## கைபிரதிகள்









உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431


## BIBLE STUDY BOOKS IN ENGLISH











AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To